# சங்க இலக்கியத்தில் பெண்பாற் புலவர்களின் பங்களிப்பு

முனைவர் ஆ. மணி

# Contribution Of Female Poets In The Sangam Literature

Dr A Mani

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி -605 003

Assistant Professor, Department of Tamil, Bharathidhasan Government Women College, Pudhucherri -605 003, Email: manikurunthogai@gmail.com

## ஆய்வுச்சுருக்கம்

சங்ககாலத்தில் கல்வி என்பது பாலின, சமூகப் பாகுபாடு இல்லாமல் வழங்கப்பட்டது என்பதற்குச் சங்கப் புலவர்களின் பெயர்களே தக்க சான்றுகளாகும். சிலர் மருத்துவர்கள், சிலர் வணிகர்கள், சிலர் பொற்கொல்லர்கள், சிலர் கொல்லர்கள் என இருப்பதைக் காண்க. பெண்பாற் புலவர்களும் பலராக இருப்பதும் அதற்குச் சான்றாம். பல பாடல்கள் பாடிய புலவர்களும் உண்டு ஒரு பாடல் பாடிய புலவரும் உண்டு.

அவர்களில், சங்கத் தொகைகளுக்கு ஒரேயொரு பாடல் மட்டுமே தந்து, காலத்தை வெற்றி கொண்ட பெண்பாற் புலவர்களின் பாடல்களைத் தொகுத்து நோக்கி, அப்பாடல்கள் உணர்த்தும் கருத்துக்களை விளக்கிக் காட்டுவது இவ்வுரையின் களமும் தளமும் ஆகும். சங்கப் பாடற்பதிப்புக்களும் ஆய்வு நூல்களும் இவ்வுரைக்குத் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**தேடுசொற்கள்:** சங்கப் பெண்புலவர், சங்க இலக்கியம், அகமரபுகள், புறமரபுகள், உவமை நலன், வரலாற்றுச் செய்திகள், வாழ்வியல் சிந்தனைகள், உயிரியல் செய்திகள்.

## Abstract

Women education was denaied for some centuries in Tamil Nadu. But in Sangam era, education was given to all with out gender and social discrimination (excemptions maybe). See the name of sangam poets some are docters (Eg. Uraiyur Maruthuvan Thamotharan), some are Merchants (Kaviri puumpattinathu Pon Vanikanar makanar Napputhanar), some are gold smiths (Thankal Porkollan Vennakanaar).

Some of the female poets gave only one song to sangam Tamil and won the era. The article explains the ideas expressed by the above Poets. Sangam texts and papers of the above texts have been taken as basics to this article.

**Keywords:** Female poets, Sangam Literature, History, Internal traditions, Peripheral traditions

..........................................................................................................................................

**உரைக்களம்**

சங்ககாலத்தில் கல்வி என்பது பாலின, சமூகப் பாகுபாடு இல்லாமல் வழங்கப்பட்டது என்பதற்குச் சங்கப் புலவர்களின் பெயர்களே தக்க சான்றுகளாகும். சிலர் மருத்துவர்கள், சிலர் வணிகர்கள், சிலர் பொற்கொல்லர்கள், சிலர் கொல்லர்கள் என இருப்பதைக் காண்க. பெண்பாற் புலவர்களும் பலராக இருப்பதும் அதற்குச் சான்றாம். பல பாடல்கள் பாடிய புலவர்களும் உண்டு ஒரு பாடல் பாடிய புலவரும் உண்டு. அவர்களில், சங்கத் தொகைகளுக்கு ஒரேயொரு பாடல் மட்டுமே தந்து, காலத்தை வெற்றி கொண்ட பெண்பாற் புலவர்களின் பாடல்களைத் தொகுத்து நோக்கி, அப்பாடல்கள் உணர்த்தும் கருத்துக்களை விளக்கிக் காட்டுவது இவ்வுரையின் களமும் தளமும் ஆகும். சங்கப் பாடற்பதிப்புக்களும் ஆய்வு நூல்களும் இவ்வுரைக்குத் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

**சங்கப் பெண்பாற் புலவர்களின் தொகை - கருத்துவேறுபாடுகள்**

சங்கப் புலவர்களுள் பெண்பாலர் எத்தனைப் பேர் என்பதை முதற்கண் அறிவது பொருத்தமுடையது.

சங்கப்பெண்பாற் புலவர்களின் தொகை 30 என்பது சைவசித்தாந்த மகா சமாசப் பதிப்புத் தரும் செய்தியாகும். புலவர்களின் பெயர்வகை என்ற தலைப்பிலான பகுப்பில் பெண்பாற்புலவர் என்ற உட்தலைப்பில் எண்ணிக்கை கூறாது, 30 புலவர்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன (வையாபுரிப்பிள்ளை, 1967:1430).

பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 30 என்றே ந.சஞ்சீவியின் சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள் என்ற நூலுள்ளும் குறிப்பிடப்பட்டுள்ளது (ந.சஞ்சீவி 1973:32). நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய மூன்று அகநூல்களிலும், புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய இரண்டு புறநூல்களிலும் பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பெண்பாற்புலவர்களுள் அகம் மட்டும் பாடியோர் 15 பேர் ஆவார். புறம் மட்டும் பாடியோர் எண்மர். அகப்பொருளும் புறப்பொருளும் பாடியோர் எழுவராவர். இவர்கள் பாடிய அகப்பாடல்களின் தொகை 87. புறப்பாடல்களின் எண்ணிக்கை 67. சமாசப்பதிப்பு கூறும் முப்பதின்மரோடு மேலும் அறுவரைச் சிலர் பெண்பாலராகக் கருதுவர் என்றும், அவர்களையும் சேர்த்தால் பெண்பாற்புலவர்களின் எண்ணிக்கை 36 பேர் எனக் கருத இடமுண்டு என்றும், இவ்விருவரும் பாடிய 30 பாடல்களையும் சேர்த்தால் பெண்பாற்புலவர்கள் பாடிய பாடல்களின் தொகை 184 ஆகும் என்றும் கூறுவர் (ந.சஞ்சீவி, 1973:46-55). மேலும் சமாசப் பதிப்பின் 1460 ஆம் பக்கத்தில் பெண்பாற் புலவர் என்ற உட்தலைப்பில் காட்டப்பட்ட புலவர்களைச் சுட்டும் எண்களின் எண்ணிக்கை 26 எனக் கணக்கிட்டு, அப்பதிப்பு பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையை 30 என்றும், 26 என்றும் கூறுகின்றது. அது ஆய்வுக்குரியது என்பர் (மேலது: 54).

பிறர் கருதும் அறுவரைப் பெண்பாலர் எனக் கணக்கிட்டுரைக்கும் சஞ்சீவி, முடத்தாமக் கண்ணியாரைப் பெண்பாலர் எனப் பிறர் கருதுவர் எனக் குறிப்பிட்டாலும், அவரைப் பெண்பாலர் கணக்கீட்டினுள் சேர்க்காதது சிந்தனைக்குரியது. பிறர் கருத்துக்களுள் ஒன்றை ஏற்பதற்கும், ஒன்றை ஏற்காமைக்கும் சஞ்சீவி காரணங்கூறாமை பொருத்தமுடையதன்று.

பெண்பாற் புலவர்களின் தொகை 33 என மு. அப்பாஸ் மந்திரியின் 'தமிழ் அறிஞர்களும் தமிழ் இலக்கியமும்' என்ற நூல் கூறுகின்றது என்பர். சிவா என்பவர் பெண்புலவர்களின் எண்ணிக்கை 30 என்றும், 42 என்றும் பலவாறு கூறுவர் எனக் குறிப்பிட்டு, அகம் பாடியோர் 87, புறம் பாடியோர் 67 ஆக 154 பேர் என்பர். பெண்பாற்புலவர் பாடிய மொத்தப்பாடல்களின் தொகை எனச் சஞ்சீவி சுட்டிய 154 என்பதையே இவர் புலவர் எண்ணிக்கையாகக் கருதிவிட்டார் போலும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இணையப் பக்கத்தில் தரப்பட்டுள்ள சங்ககால மகளிர் என்னும் பெயரிய கருத்தரங்க அழைப்பிதழில் சங்கப் பெண்புலவர் முப்பதின்மர் என்ற குறிப்புத் தரப்பட்டுள்ளது.

தமிழ் விக்கிபீடியாவில் சங்கப் பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை 32 பேர் என்ற குறிப்புத் தரப்பட்டுள்ளது.

தாயம்மாள் அறவாணன் தொகுத்தளித்தளித்த 'மகடூஉ முன்னிலை' என்ற நூலில் சங்கப் புலவர்களின் தொகை 45 எனக் குறித்துள்ளார்.

குறுந்தொகையின் முதல் பதிப்பாசிரியரும் உரைகாரருமாகிய தி. செள. அரங்கனார் குறுந்தொகையில் பாடியுள்ள புலவர்களுள் பெண்பாலர் போலும் என 25 பேரையும் பெண்பாலர் என 5 பேரையும் குறிப்பிட்டுள்ளார். (தி.செள. அரங்கனார், 1915:35-43). இதன்மூலம் குறுந்தொகையில் மட்டும் 30 பெண்பாற் புலவர்கள் பாடியுள்ளனர் எனத் தி.செள. அரங்கனார் கருதுவதை அறியலாம். ஆனால் அணிலாடு முன்றிலார் முதலான பாடற்றொடரால் பெயர்பெற்ற புலவர்கள் பத்துப்பேரை எந்தத் தரவுகளும் இல்லாமல் பெண்பாலார் போலும் எனக் கருத்துரைப்பது பொருந்தாது என்றும், வெள்ளூர்க்கிழார் மகனார் வெண்பூதியாரையும் பெண்பாலர் என்பது ஏற்புடையதன்று என்றும் கூறுவர் (ஆ.மணி, 1999:86-7).

அக்கருத்து இயைபுடையதாதலால் அதனை நாம் ஏற்கலாம். மேற்கண்ட செய்திகளைத் தொகுத்து நோக்கும்பொழுது சங்கப் பெண்பாற்புலவர்களின் தொகை 26, 30, 32, 33, 36, 42, 154 எனப் பலவாறாகச் சுட்டப்பட்டுள்ளது புலனாகின்றது.

சங்கப் பெண்பாற் புலவர்களுள் ஒரு பாடல் மட்டும் பாடிய புலவர்களாகப் பதினாறு பேரைச் சமாசப் பதிப்பால் அறிகின்றோம். அவர்கள் பெயர்கள் வருமாறு: 1) அஞ்சியத்தை மகள் நாகையார் (அகநா. 352), 2) அஞ்சில் அஞ்சியார் (நற். 90), 3) ஆதிமந்தி (குறுந். 31), 4) ஊண்பித்தை (குறுந். 232) 5) காவற்பெண்டு (புறநா. 86). 6) குமுழி ஞாழலார் நப்பசலையார் (அகநா. 160), 7) குறமகள் இளவெயினி (புறநா. 157), 8) குறமகள் குறியெயினி (நற். 357), 9) தாயங்கண்ணியார் (புறநா. 250), 10) நப்பசலையார் (நற். 243), 11) பாரிமகளிர் (புறநா. 112), 12) பூதப் பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு (புறநா. 246), 13) பேய்மகள் இளவெயினி (புறநா. 11), 14) போந்தைப் பசலையார் (அகநா. 110), 15) வருமுலையாரித்தி (குறுந். 176), 16), வெண்ணிக்குயத்தியார் (புறநா. 66), நற். 243 ஆம் பாடலைப் பாடியவர் காமக்கணிப் பசலையார் என்பது பின்னத்தூரார் உரைப்பதிப்பு (அ.நாராயணசாமி ஐயர், 1962: 418)

புலவர் பெயர், எண்ணிக்கை பற்றிய சிக்கல்கள் பல இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. அவற்றைத் தீர்ப்பது நம் கடமையாகும். எனினும் அவை தனித்த பார்வைகளுக்குரியன.

பாடல்கள் வகைதொகை

ஒரு பாடல் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ள மேற்கண்ட பதினாறு புலவர்களில் அகப்பொருள் பாடியோர் 9 பேர். புறப்பொருள் பாடியோர் 7 பேர் ஆவர். இவர்கள் பாடிய நூல்கள் குறுந்தொகை (மூவர்) நற்றிணை (மூவர்) அகநானூறு (மூவர்), புறநானூறு (எழுவர்) ஆகியனவாகும்.

குறுந். 31; 176; 232, நற். 90; 243; 2657 அகநா. 110; 160; 352, புறநா. 11; 66;86; 112; 157; 246; 250 ஆகியன நூல்வாரியாக இப்புலவர்கள் பாடிய பாடல்களாகும்.

குறிஞ்சி 3 பாடல்கள் (குறுந். 176, நற். 357, அகநா. 352), பாலை 2 பாடல்கள் (குறுந். 235, நற். 243), மருதம் 2 பாடல்கள் (குறுந். 31, நற். 90), நெய்தல் 2 பாடல்கள் (அகநா. 110;160) என்பது அகப்பாடல்களின் திணை வகைமையாகும். அகனைந்திணைகளில் முல்லைத்திணை இடம்பெறாதது நோக்கத்தக்கது.

வாகைத்திணையில் 2 பாடல்கள் (அரசவாகை - புறநா. 66, ஏறாண்முல்லை - புறநா. 86), பாடாண்திணையில் 2 பாடல்கள் (பரிசில் கடாநிலை - புறநா. 11, இயன்மொழி - புறநா. 157), பொதுவியல் திணையில் 3 பாடல்கள் (கையறுநிலை - புறநா. 112, ஆனந்தப் பையுள் - புறநா. 246, தாபதநிலை - புறநா. 250) என்ற திணை, துறைவகைமைகளில் புறப்பாடல்கள் அமைந்துள்ளன.

அகத்திணைகளில் குறிஞ்சியும், புறத்திணைகளில் பொதுவியலும் முறையே மூன்று பாடல்களைப் பெற்று அதிகப் பாடல்களைப் பெறும் திணைகளாகின்றன.

அகப்பாடல்களைக் கூற்று முறையில் நோக்கும்பொழுது, தலைவி கூற்றாக நான்கு பாடல்களும் (குறுந். 31, நற். 243; 357, அகநா. 352), தோழி கூற்றாக ஐந்து பாடல்களும் (குறுந். 176; 232, நற். 90, அகநா. 110; 160) அமைந்துள்ளன. பெண்பாற்புலவர்களின் பாடற்கூற்றுக்கள் அனைத்தும் பெண்மாந்தர்களின் கூற்றுக்களாகவே அமைந்திருப்பது குறிக்கத்தக்கது.

புறப்பாடல்களில் சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ (புறநா. 11), சோழன் கரிகாற்பெருவளத்தான் (புறநா. 66) ஆகிய பேரரசர்களும், ஏறைக்கோன் (புறநா. 153) என்ற சிற்றரசனும் பாடப்பட்டுள்ளனர். புறநா. 86இல் வீரன் ஒருவன் பாடப்பட்டுள்ளான். பிற பாடல்களில்

பாடப்பட்டவர் பற்றிக் குறிப்பின்மையால் அவர்கள் இன்னாரெனக் கூறுவது எளிதன்று. எனினும் பாடற்பொருள், சூழல், இடவமைதி கருதிப் பாரி (புறநா. 112), பூதப்பாண்டியன் (புறநா. 246) ஆகியோரை அப்பாடல்கள் உணர்த்துவதாகக் கொள்ளலாம். புறநா. 250 ஆம் பாடலுக்குப் பாடிய புலவர் பெயர் மட்டுமே கிடைத்துள்ளது. பாடப்பட்டோன் பற்றிய அடிக்குறிப்புச் சிதைந்துள்ளது. எனினும் அப்பாடலைப் பொருண்மை, திணை, துறையடிப்படையில் பார்க்கும்பொழுது, அப்பாடலும் பூதப்பாண்டியனின் மறைவைக் குறித்துப் பாடியதாகலாம் எனக் கூறத் தோன்றுகின்றது. எனினும் இக்கருத்து மேலும் ஆராய்தற்குரியது.

அகப்பாடல்களைப் பொறுத்தவரையில், 1) அறத்தொடு நிற்றல் (குறுந். 31, அகநா. 110), 2) குறைநயத்தல் (குறுந். 176), 3) பிரிவிடை மெலிந்து கூறல், வற்புறுத்தல் (நற். 243, குறுந். 232) 4) வரைவு நீட்டித்த காலத்து ஆற்றுவல் எனல் (நற். 357), 5) வரைவு மலிவு கூறுதல் (அகநா. 160:352), 6) வாயில் மறுத்தல் (நற். 90) ஆகிய சூழல்களில் அப்பாடல்கள் பாடப்பெற்றுள்ளன. இனி, தரவுக்குரிய பாடல்கள் உணர்த்தும் பொருண்மைகளைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

1. அகமரபுகள்
2. புறமரபுகள்
3. உவமை நலன்
4. வரலாற்றுச் செய்திகள்
5. வாழ்வியல் சிந்தனைகள்
6. உயிரியல் செய்திகள்

### 1. அகமரபுகள்

ஒரு பாடலால் சங்கப்புலவர் வரிசையில் இடம்பெற்றுள்ள பதினாறு பெண்புலவர்களுள் ஆதிமந்தியார், போந்தைப் பசலையார் ஆகிய இருவர் பாடல்களுக்கு அறத்தொடு நிற்றல் எனக் கூற்றுக் குறிக்கப்பட்டுள்ளது. ஆதிமந்தியார் பாடல் நொதுமலராகிய அயலார் வரைவுக்கு வருங்காலத்தில் தலைவி, தோழிக்கு அறத்தொடு நிற்பதாகும்.

உடம்பும் உயிரும் வாடியபோதும் தலைவன் உள்ள இடத்திற்குச் செல்லுதல் தலைவிக்கில்லை என்பார் தொல்காப்பியர் (தொல். பொருள். பொருளி. 8). ஆனால் ஆதிமந்தியாரின் குறுந்தொகைத் தலைவியோ, மள்ளர் குழீஇய விழவிடங்களிலும் மகளிரைத் தழுவியாடும் துணங்கைக் கூத்திடங்களிலும் சென்று தலைவனைத் தேடியும் மாண்தக்கோனை யாண்டும் காணேன் என்கின்றாள் (உ.வே.சா., 1983:79). தலைவி தேடிச்சென்றது... வரைவு கடாயது. பொருட்பயன் தருதலின் அறக்கழிவுடையவேனும் அமைந்தன என்பார் நச்சினார்க்கினியர் (வெள்ளை வாரணன், 1983:76). எனவே, தலைவி, தலைவனைத் தேடிச் செல்லுவது அறக்கழிவுடையது என்பது நச்சினார்க்கினியர் கூறுவதும், குறுந். 31 ஆம் பாடல் வரைவுகடாயது என்ற பொருட்பயன் தருவதால் அகப்பாடலாக அமைந்தது என்பதும் குறிக்கத்தக்கது. எனினும் நச்சினார்க்கினியர் கருத்து மரபுக்குத் தகக் குறுந். 31ஆம் பாடலை அமைக்கும் எண்ணமுடையது. ஆனாலும் தலைவனிருக்குமிடங்களில் சென்று தேடியும், அவனைக் காணேன் எனத் தலைவி மொழிவது தொல்காப்பிய மரபின் நெகிழ்ச்சி என்றே கூறத் தோன்றுகின்றது.

கடற்கரைச் சோலையில் மணல்வீடு கட்டி விளையாடிய தலைவியிடம் நானும் உங்களோடு விளையாடினால் இடையூறு உண்டோ எனத் தலைவன் ஒருவன் கேட்டான். உயர்குடித் தோன்றலாகிய உனக்கு இது தகாது என்று நாங்கள் கூறியும், நான் செல்லவா? என்று விடைகேட்டு நின்றான். செல்லுக என்று நான் கூறியும் செல்லாமல் தலைவியைக் கூர்ந்து நோக்கி நின்ற அத்தலைவனே நம் தலைவியின் மெய்வேறுபாட்டிற்குக் காரணம் போலும். இதனையல்லாமல் வேறு காரணமில்லை எனச் சூள் செய்து தருவேன் எனத் தன் தாயிடம் கூறுகின்ற தோழியைப் போந்தைப் பசலையாரின் அகநானூற்றுப் பாடலால் (பொ.வே.சோமசுந்தரனார், 1970:391-5) அறியலாம். தாயிடம் தன் தலைவியின் காதல் குறித்துச் சூள் செய்யும் மகளை இதன் மூலம் அடையாளம் காணலாம்.

தொல்காப்பியர் கூறிய ‘எளித்தல் ஏத்தல்’ (தொல். பொருள்.பொருளி. 12) ஆகிய அறத்தோடு நிற்றல் நிலைகளை அகநா.110 ஆம் பாடலில் காணமுடிகின்றது.

தலைவன் வரைய வருங்காலத்துக் கூற்றுக்களாக அகநா. 160; 352 ஆகிய பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ‘இதுகாறும் இரவுக்குறியில் வந்துசென்ற தலைவன் பகற்குறியில் தேரேறி வந்தது கண்டு என் நெஞ்சம் நடுங்குகின்றது’ என்கின்றாள் ஒரு தலைவி (அகநா. 160).

அகநா. 352 ஆம் பாடலுக்கு 'வரைந்து எய்திய பின்னர் மணமனைக்கட் சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது. வரைவு மலிந்து சொல்லிய தோழிக்குத் தலைமகள் சொல்லியதூஉமாம்' என்ற இரு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. பாடலில் 'வதுவை நாளினும் இனியனால் எமக்கே' எனவரும் தொடர் அப்பாடல் வரைவுக்குப் பின்னர் நிகழ்ந்தவற்றைப் பாடற்பொருண்மையாகக் கொண்டதென்பதை உணர்த்துகின்றது. எனவே, இப்பாடலுக்கு முதற்கூற்றே பொருத்தமுடையது எனலாம். வரைந்து எய்திய பின்னர்த் தோழி தலைவியின் மனைக்குச் சென்ற காலத்தில் தலைவி தன் தலைவனைப் புகழ்ந்து பேசுவாள் என்ற கருத்துத் தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவில்லை. கற்புக் காலத்தில் தலைவியைக் கண்டு அளவளாவும் தோழி, முற்காலத்து நிகழ்வுகளைக் கற்புக் காலத்துடன் ஒப்பிட்டுப்பேசும் பாடல்கள் (குறுந். 178; 193; 228) உள. ஆனால் தலைவியே தலைவனைப் புகழ்ந்துரைக்கும் அகநா. 352 ஆம் பாடல் புதுமையுடையதாகத் தோன்றுகின்றது.

தலைவன் தோழியிடம் குறைநேர வேண்டி நின்றதைத் தலைவியிடம் கூறி, அவளது இசைவைத் தோழி விரும்புதலைக் குறுந். 176 ஆம் பாடலில் காணுகின்றோம். அதனைப் போன்றே பிரிவுக்காலத்தில் ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துகின்றாள் குறுந். 232 ஆம் பாடற்றோழி. பிரிவுக் காலத்தில் மெலிந்து பேசும் தலைவியை நற். 243 பாடலிலும், வரைவு நீட்டித்தபோது ஆற்றுவேன் என்ற தலைவியை நற். 357 ஆம் பாடலிலும் இனம் காணலாம்.

## 2. புறமரபுகள்

ஆய்வுக்குரிய புறப்பாடல்களில் இடம்பெற்றுள்ள புறமரபுகளைப் பின்வருமாறு பகுக்கலாம்.
2.1 தோற்றவனைப் பாராட்டுதல்

வெற்றி பெற்ற அரசனைப் பாராட்டுவது புலவர் பெருமக்களின் பெருமரபு. ஆனால் வெற்றிகொண்ட பேரரசனின் முன்னின்று உன்னினும், உன்னிடம் தோற்றுப் புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர்விட்டவன் சிறந்தவன் எனப் பாராட்டும் புதிய வழக்கினை வெண்ணிக் குயத்தியாரிடம் காணமுடிகின்றது. பாடல் வருமாறு:

"களியியல் யானைக் கரிகால் வளவ
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்ல னன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகுபுகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே" (புறநா. 66)

### 2.2 குறுநில மன்னனைப் பாடுதல்

சங்கப் பாடல்களுள் பாடப்பெற்ற பேரரசர்கள் 107 பேர் ஆவர். சிற்றரசர்களின் தொகை 167 ஆகும். மிகுதியான புலவர்களால் (11 பேர்) பாடப்பட்டவன் நன்னன் ஆவான் (ந. சஞ்சீவி 1973:393-4). இதன்மூலம் பேரரசர்களைவிடச் சிற்றரசர்களையும் குறுநில மன்னர்களையும் பாடுவதே சங்கப் புலவர் பெருமரபு என்பதை அறியலாம். இம்மரபினை அடியொற்றிக் குறமகள் இளவெயினி ஏறைக்கோனைப் பாடியுள்ளார் (புறநா. 153). இவ்ஏறைக்கோன் எப்பகுதியை ஆண்டவன் என்பது பற்றிய குறிப்பு பாடலிலோ, பழையவுரையிலோ, ஔவை. துரைசாமிப் பிள்ளையின் உரையிலோ இடம்பெறவில்லை. தலைவர்க்குரிய பெருமிதப் பண்புகள் உடையவன் ஏறைக்கோன் என்பது குறமகள் இளவெயினியின் கருத்து. பாடல் வருமாறு:

"தமர்தன் தப்பின் அதுநோன் றல்லும்
பிறர்கை யறவு தான் நாணுதலும்
படைப்பழி தாரா மைந்தினன் ஆகலும்
வேந்துடை அவையத்து ஓங்குபு நடத்தலும்
நும்மோர்க்குத் தகுவன அல்ல எம்மோன்
...
பெருங்கல் நாடனெம் ஏறைக்குத் தகுமே" (புறநா. 157)

### 2.3 வீரர்களைப் பாடுதல்

வீரர்களைப் பாடும் மரபினைத் தொல்காப்பியர் "வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன், தான் மீண்டு எறிந்த தார்நிலை... ஒருவன் ஒருவனை உடைபுக்குக், கூழை தாங்கிய எருமையும் படையறுத்துப், பாழி கொள்ளும் ஏமத்தானும்' (தொல். பொருள். புறத். தமிழ்.1018) என்ற தும்பைத் திணைப் போர் நிகழ்வுளைச் சுட்டுமிடங்களில் கூறுவர். இம்மரபினைப் பின்பற்றிக் காவற்பெண்டு, தன் மகனைத் தேடி வரும் ஒருவரிடம்,

"...என் மகன்
யாண்டுள னாயினு மறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
ஈன்ற வயிறோ இதுவே

தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே" (புறநா. 86)
என உரைப்பதாகப் பாடுகின்றார்.

### 2.4 பெண்ணின் வாழ்வைப் பாடுதல்

பெண்பாற் புலவர்களின் பாடல்களில் தம்முடைய வாழ்க்கையையும் பாடும் புதுமையைக் காணமுடிகின்றது. தம் தந்தையை இழந்த நிலையைப் பாரிமகளிரும் (புறநா. 112), தன் கணவனை இழந்தபின்னர் எரியழல் புகத் துடிக்கும் தன் நிலையைப் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டுவும் (புறநா. 246) பாடியுள்ளனர். கணவனை இழந்த பெண்ணின் நிலையைத் தாயங்கண்ணியாரும் பாடியுள்ளார். (புறநா. 250).

### 3. உவமை நலன்

தோழி தன்னெஞ்சம் கலங்குவதை, 'வேற்றுப் புலங்களையுடைய நல்ல நாட்டிற் பெய்த இடியேற்றையுடைய மழைநீர் கலங்கி வருவதுபோலக் கலங்குவதாகக் குறுந். 176 ஆம் பாடலில் புனைகின்றார் வருமுலையாரித்தி (உ.வே.சா. 1983:370).

பெண்களின் கண்களுக்குக் குவளை மலர்களை உவமை கூறுவது புலவர் மரபு. குறமகள் குறியெயினியோ 'உண்கண் ஒப்பின் நீலம்' (நற். 357) எனக் குவளை மலர்களுக்கு மையுண்ட கண்களை உவமையாக்குகின்றார்.

தேர் உருளையால் அறுக்கப்பெற்ற நெய்தல் மலர்கள் வாடி மேலெழுவது, மேலே தலையைத் தூக்கிய பாம்பைப் போன்றிருப்பதாகப் பாடுகின்றார் குமுழி ஞாழலார் நப்பசலையார் (அகநா. 160).

அதியமான் அஞ்சியின் புகழ்மிகு பாண்மகன் புனைந்த புதுமையுடைய பண்ணைக் காட்டிலும், வதுவை நாளில் இருந்ததை விடவும் தலைவன் இப்போது மிகவும் இனியனாக இருக்கின்றான் என்கின்றாள் அஞ்சியத்தை மகள் நாகையாரின் அகநானூற்றுத் தலைவி (அகநா. 352).

ஈன்ற வயிற்றுக்குப் புலி சேர்ந்து போகிய கல்லளை என்பது காவற்பெண்டு கூறும் உவமை (புறநா. 86). கணவனை இழந்த பெண்ணுக்கு 'நள்ளிரும் பொய்கையும் தீயு மோரற்றே' (புறநா. 246) என்கின்றார் பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு.

### 4. வரலாற்றுச் செய்திகள்

அகப்பாடல் பாடிய ஒன்பது பெண்பாற் புலவர்களுள் அஞ்சியத்தை மகள் நாகையார் மட்டுமே அதியமான் அஞ்சி விரைந்து செல்லும் தேருடையவன் என்ற செய்தியைக் கூறியுள்ளார் (அகநா. 352). பிறர் பாடிய அகப்பாடல்களில் வரலாற்றுக் குறிப்புக்கள் ஏதுமில.

சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ தண்பொருநை பாயும் வஞ்சிக்குரியவன் (புறநா. 11). வெண்ணிப் பறந்தலைப் போரில் கரிகால் வளவனால் வெல்லப்பட்ட அரசன் புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்தான் (புறநா. 66). ஒரு திங்களுக்குள் பாரியை வேந்தர் வென்றனர். அப்போரில் பாரி இறந்து பட்டான் (புறநா. 112). ஏறைக்கோன் சீரிய பண்புகளுடையவன் (புறநா. 157) ஆகிய வரலாற்றுக் குறிப்புக்களைப் பெண்பாற் புலவர்களின் புறப்பாடல்களால் அறிகின்றோம். இவற்றைக் காணும்போது இப்பதினாறு புலவர்களுக்கும் வரலாற்றுநோக்கு பேரளவில் இருப்பதாகத் தோன்றவில்லை என்றே சொல்லலாம். அகப்பாடல்களில்கூட வரலாற்றுச்செய்திகளைப் பாடிய புலவர்கள் உண்டு என்பதை ஈண்டு நினைவுகூர்க.

### 5. வாழ்வியல் சிந்தனைகள்

பெண்பாற் புலவர்களின் இப்பதினாறு பாடல்களில் வாழ்வியல் தொடர்புடைய பின்வரும் கருத்துக்கள் வெளிப்படக் காணலாம்.

தலைவன் இருக்குமிடம் தேடித் தலைவியர் செல்லுதல் உண்டு (குறுந். 31). பன்னாள் வந்து பணிமொழி கூறித் தோழியின் நெஞ்சத்தைத் தலைவன் நெகிழச் செய்து அவளுதவியால் தலைவியைச் சந்திக்க முயலுதல் (குறுந். 176). வினையிடத்தில் தலைவன், தலைவியை நினைத்துப் பார்ப்பான். எனினும் வினை முடியாமையால் மீண்டு வந்திலன் (குறுந். 232).

'பூசல் கூட்டா நயனில் மாக்கள் குழீஇய இவ்வேந்துடை அவை பயனற்றது' (நற். 90). நிலையற்ற பொருளைத் தேடும் முயற்சியைக் கைவிட்டு அறிவுடையோர் தம் தலைவியரைப் பிரியாது வாழ்வர். பொருள் தேடிச்செல்வது ஆடவர் இயல்பாயின் அறத்தைவிடப் பொருள் அரியதுபோலும் (நற். 243). சிற்றில் கட்டிச் சிறுசோறாக்கி விளையாடும் பண்புடையவள் தலைவி.

அவளைக் கண்டவுடன் காதல் கொண்டான் தலைவன். நாங்கள் அக்காதலை உடனே ஏற்கவில்லை (அகநா. 110). பகற்பொழுதில் தலைவனின் தேர் வந்தமைக்குத் தலைவி அஞ்சுபவள் (அகநா. 160). தலைவன் நற்குடியினன், அன்பினன் எனக் கூறித் தோழி மணத்திற்குப் பெற்றோரின் உடன்பாடு பெறுதல் (அகநா. 352).

பாணன் அரசனிடத்துப் பொற்றாமரை பெறுதல் (புறநா. 11). புறப்புண்ணுக்கு நாணி வடக்கிருந்து உயிர்விடும் தமிழரசர்களின் மான உணர்ச்சி. அதனைப் பாராட்டிப் பாடும் புலவரைத் தடுக்காத அரசனின் பேருணர்வு (புறநா. 66). போர்க்களமே அக்கால இளைஞர்களின் இருப்பிடம் (புறநா. 86). தமக்குரியோர் செய்யும் பிழைகளைப் பொறுத்தலும், பிறர் வறுமைக்குத் தான் நாணுதலும், பிறர் பழிக்காத வலிமையும், அவைக்கண் மேம்பட்டு நடப்பதுமாகிய பண்புகள் அரசர்க்குரியன (புறநா. 157). கணவனை இழந்த மகளிரை நெருப்பில் விழாது தடுக்கும் பண்புடையோர் அக்காலச் சான்றோர் (புறநா. 246). கைம்மைக் கோலம் உண்டு. கைம்மை வாழ்வு மிகுந்த துன்பமுடையது (புறநா. 250). கைம்மை வாழ்வின் துன்பத்தை உளமுருக இரு புலவர்கள் பாடியுள்ளது நோக்கத்தக்கது.

## 6. உயிரியல் செய்திகள்

அடும்பு (அகநா. 160), பலா (அகநா. 352), அல்லியரிசி (புறநா. 250), எள் (புறநா. 246), வெள்ளரி (புறநா. 157), கோடல் (புறநா. 157), யா (குறுந். 232) ஆகிய தாவரங்களையும், மான் (புறநா. 157), கடுவன் (அகநா. 352), கொழுமீன் (அகநா. 110), யானை (குறுந். 232, புறநா. 66), குயில் (நற். 243), மயில் (நற். 357), யாமை (அகநா. 160), புலி (புறநா. 86:157) புரவி (அகநா. 110; 160) ஆகிய பறவை, விலங்குகளையும் பற்றிய குறிப்புக்கள் தரவுப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

தரவுக்குரிய பாடல்களைப் பாடிய புலவர்களுள் குமுழி ஞாழலார் நப்பசலையார் உயிரியல் செய்திகளைப் பாடுவதில் சிறந்தவராகத் தோன்றுகின்றார். அவர் தரும் செய்தி வருமாறு:

நிறைசூலுற்ற யாமை அடும்பின் கொடிகளைச் சிதைத்துக் கொண்டு உப்பங்கழியின் வெண்மணல் மேட்டில் வந்து, யானைக் கொம்பினால் செய்த வட்டின் வடிவமுடைய புலால் நாறும் முட்டையை ஈன்று மறைத்துப் புதைத்து வைக்கின்றது; பிளந்த வாயுடைய ஆண் யாமை, அம்முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்படும் காலம்வரை பாதுகாக்கும் இயல்புடையது (அகநா. 160).

## முடிபுகள்

1. சங்கப்புலவர்களில் பெண்பாலர் எத்தனைப் பேர் என்பதில் கருத்துவேறுபாடுகள் உள.

2. தி.செள. அரங்கனார் பாடலால் பெயர்பெற்ற புலவர்கள் பலரைப் பெண்பாலர் என்று கூறியிருப்பதற்கு எந்த ஒரு சான்றையும் தரவில்லை. எனவே, அவர் கருத்து ஏற்புடையதாகத் தோன்றவில்லை.

3. ஒரு பாடல் மட்டுமே கிடைக்கப்பெற்றுள்ள பாடல்களைப் பாடிய பெண்பாற் புலவர்களின் தொகை பதினாறாகும்.

4. பதினாறு பாடல்களுள் அகப்பாடல்கள் அனைத்தும் பெண் மாந்தர் கூற்றாகவே அமைந்துள்ளமை குறிக்கத்தக்கது.

5. புறநா. 250 ஆம் பாடல் பூதப்பாண்டியன் மறைவைக் குறித்துப் பாடப்பட்ட பாடலாக இருக்கலாம்.

6. தலைவனைத் தேடிச் சென்று காணாமல் திரும்பியதாகக் கூறும் ஆதிமந்தியாரின் பாடற்றலைவி தொல்காப்பிய மரபின் நெகழ்ச்சி எனலாம்.

7. கற்புக்காலத்தில் தலைவனைப் புகழ்ந்து பாடும் அகநா. 352 ஆம் பாடல் புதுமை சான்றதாகும்.

8. வினை, பயன் உவமைகள் பெண்பாற் புலவர்தம் பாடல்களுள் பயின்றுள்ளன.

9. பதினாறு புலவர்களுக்கும் வரலாற்று நோக்கம் பேரளவில் இருந்ததாகத் தெரியவில்லை.

10. கைம்மை வாழ்வின் துன்பத்தை இரு புலவர்கள் பாடியுள்ளனர்.

11. உயிரியல் செய்திகளைப் பாடுவதில் சிறப்புடையவராகக் குமுழி ஞாழலார் நப்பசலையார் தோன்றுகின்றார்.

12. போரில் தோல்வியுற்ற மன்னனை வென்ற மன்னனின் முன்னர்ப் பாராட்டும் துணிவை வெண்ணிக் குயத்தியாரிடம் காண்கின்றோம்.

13. குறுநிலமன்னர்களைப் பாடும் சங்கமரபினைக் குறமகள் இளவெயினி பாடலில் காணலாம்.

14. வீரர்களைப் புகழும் தொல்காப்பிய மரபு காவற்பெண்டுவிடம் ஆளுமை பெற்றுள்ளது.

15. தம்முடைய வாழ்க்கையையும் பாடும் புதுமையைப் பெண்பாற் புலவர்களிடம் காண முடிகின்றது.

**துணை நூற்பட்டியல்**


இளம்பூரணர் (உரை ஆ.). 2006 (மூன்றாம் பதிப்பு). சென்னை: சாரதா பதிப்பகம்.

சஞ்சீவி. ந. 1973. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள். சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.

சாமிநாதையர். உ.வே. (பதி. ஆ.). 1963 (ஆறாம் பதிப்பு). புறநானூறு மூலமும் உரையும். சென்னை: கபீர் அச்சுக்கூடம்.

சாமிநாதையர் உ.வே. (உரை ஆ.). 1983. குறுந்தொகை. அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சுந்தரமூர்த்தி. கு. (பதி. ஆ.). 1986. தொல்காப்பியம் - பொருளதிகாரம். தொகுதி-2. அண்ணாமலைநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சோமசுந்தரனார். பொ.வே. (உரை ஆ.) 1970. அகநானூறு - களிற்றியானைநிரை. சென்னை: கழகம்.

சௌரிப்பெருமாள் அரங்கனார். தி. (உரை. ஆ.). 1915. குறுந்தொகை மூலமும் புத்துரையும். வேலூர்: வித்யாரத்னாகர அச்சுக்கூடம்.

தமிழண்ணல் (உரை ஆ.). 2008. தொல்காப்பியம் மூலமும் கருத்துரையும். மதுரை: மீனாட்சி புத்தக நிலையம்.

துரைசாமிப் பிள்ளை. ஔவை. சு. (உரை ஆ.). 1960 (மறுஅச்சு). புறநானூறு (1-200 பாட்டுக்கள்). சென்னை: கழகம்.

துரைசாமிப் பிள்ளை. ஔவை. சு. (உரை ஆ.). 1972 (மறுஅச்சு). புறநானூறு (201-400 பாட்டுக்கள்). சென்னை: கழகம்.

நாராயணசாமி ஐயர். அ. முதலியோர் (உரை ஆ.). 1962 (திருத்திய மூன்றாம் பதிப்பு). நற்றிணை நானூறு. சென்னை: கழகம்.

பாலசுப்பிரமணியன். கு.வெ. முதலியோர் (உரை ஆ.). 2004. புறநானூறு மூலமும் உரையும் - தொகுதிகள். 1,2. சென்னை: நியுசெஞ்சுரிபுக் ஹவுஸ்.

மணி. ஆ. 1999. குறுந்தொகை உரைநெறிகள். முனைவர்பட்ட ஆய்வேடு. மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

மணி. ஆ. 2005. குறுந்தொகைத் திறனுரைகள். கெங்குவார்பட்டி: தமிழன்னை ஆய்வகம்.

மணி. ஆ. 2010. செம்மொழித் தமிழ் ஆய்வுரைகள், புதுச்சேரி: தமிழன்னை ஆய்வகம்.

வெள்ளைவாணன். க. (பதி. ஆ.) 1983. தொல்காப்பியம் - பொருளியல் உரைவளம். மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

வேங்கடசாமி நாட்டார் ந.மு. முதலியோர் (உரை. ஆ.). 1959 (மறுஅச்சு) அகநானூறு - மணிமிடை பவளம். சென்னை: கழகம்

வேங்கடசாமி நாட்டார் ந.மு. முதலியோர் (உரை. ஆ.). 1957 (மறுஅச்சு) அகநானூறு - நித்திலக் கோவை. சென்னை: கழகம்

வேங்கடராமன். எச். (பதி. ஆ.) 1997 (இரண்டாம் பதிப்பு). நற்றிணை மூலமும் உரையும். சென்னை: உ.வே.சா. நூல்நிலையம்.

வையாபுரிப்பிள்ளை (பதி. ஆ.). 1967 (இரண்டாம் பதிப்பு) சங்க இலக்கியம் - தொகுதிகள் 1,2. சென்னை: பாரிநிலையம்.